News and Articles in Tamil and English Please send them to:

THE EDITOR,
'The Morning Star,
Diocesan office,
Vaddukoddai.

# THE MORNING STAR

Registered as a Newspaper at the General Post Office
under No. Q / J / 104 / News / 89
Established : 1841 : A Christian Weekly : Published Every Friday
Vol:- 154 Jaffna, Friday 11 June 1993 No: 07
RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

Subscription
Island : Rs. 10/-
For Advertisements
Apply to:
THE MANAGER
'The Morning Star,
Diocesan office,
Vaddukoddai

## The Rt Rev. Dr. S. Jebanesan - Consecrated a Bishop of the Church of South India

The Consecration of the Rev Dr. S Jebanesan as the third Bishop of the Jaffna Diocese of the Church of South India was a unique one in the histoy of the Church of South India. The Rt. Rev Dr. Subramaniam Jebanesan is the second Bishop of the Jaffna Diocese to be consecrated at St George's Cathedral, Madras, the first being late Rt Rev. Dr. Sabapathy Kulandran, the first Bishop of the Diocese Bishop Kulandran of course was consecrated at St. George's Cathedral because his consecration was part of the Inauguration Service of the Church of South India on 27th September 1947.

The Consecration of Bishop Jebanesan, however took place under a different context. The tradition of the Church of South India is to consecrate a new Bishop at the Cathedral Church of his own Diocese. Because of the political turmoil which prevail in Sri Lanka and because of the dangers and difficulties involved for travel to Jaffna for the Moderator and Bishops from South India and South Sri Lanka, it was decided to consecrate the new Bishop at St George's Cathedral, in Madras.

The Consecration was a unique event also because it was a Whitsunday, the day of Pentecost on which day the pouring of Holy Spirit on the Church is commemorated. On 30th May 1993, when Dr. Jebanesan was consecrated, the two Bishops of Church of Ceylon, joined in the laying on hands. The President of Sri Lanka Methodist Church and the General Secretary of the N. C. C. of Sri Lanka were also present.

The service started at 8.30 a. m. with the procession of the clergy and the Bishops from the residence of the Madras Bishop led by a police band, Nathaswaram and Nadduwa Melam and the Cathedral choir. The Most Rev. Vasanth P. Dandin, the Moderator presided at the service. Scripture lessons were read by the following :

1st Lesson from O T. Eze 34:11 - 16 by the Rt. Rev. Andrew Kumarage of Kurunegala Diocese,

2nd Lesson from the Epistle Acts 20:28-31 by the Rev Dr. Paul Clayton of UCBWM and

3rd Lesson from the Gospels Jn 20:19-23 by the Rt. Rev. D. J. Ambalavanar, retiring Bishop and Moderator's Commissary

The Rt. Rev Samuel Amirtham, Bishop of the South Kerala Diocese and a former Principal of Tamilnadu Theological Seminary delivered the sermon. It is noteworthy to mention that Bishop Samuel Amirtham was a teacher of Bishop Jebanesan when he was a student at TTS The Bishop elect was presented to the Moderator by the following presbyters of the J. D., C. S. I.

1. The Rev. Anthony A. Paul, Secretary of the Diocese and Presbyter, Cathedral Church, Vaddukoddai



2. The Rev. S. Jeyanesan, Presbyter Colombo Church
3. The Rev. Daniel S Thiagarajah, Principal, Christian Theological Seminary, Chunnakam.

Prof. George Koshy, General Secretary of C. S. I. Synod read the instrument of appointment

The insignia of office were presented to the candidate by the following:

1. The Staff by the Moderator
2. The Pectoral Cross by the Rt Rev. Jason Dharmarajah, Deputy Moderator, C. S. I.
3. The Stole by the Rt. Rev. Prakash Rao
4. The Ring by the Rt. Rev. William Moses

The Bishops who laid hands on the head of the Bishop elect were:

1. The Most Rev. Vasanth P. Dandin, Moderator, C S I.
2. The Rt Rev Jason S Dharmarajah, Deputy Moderator, C. S. I
3. The Rt. Rev T. B. D Prakasa Rao, Bishop, Krishna-Godavari Diocese
4. The Rt Rev Dr. P. G. Kuruvilla, Bishop, North Karnataka Diocese
5. The Rt. Rev. M. Azariah, Bishop, Madras Diocese
6. The Rt. Rev. William Moses, Bishop, Coimbatore Diocese
7. The Rt. Rev Dr. Samuel Amirtham, Bishop, South Kerala Diocese
8. The Rt. Rev. S J. Theodore, Bishop, Karimnagar Diocese
9. The Rt. Rev Kenneth M. J. Fernando, Bishop of Colombo, Church of Ceylon
10. The Rt. Rev. Andrew Kumarage, Bishop of Kurunegala, Church of Ceylon
11. The Rt. Rev. D. J. Ambalavanar, Retired Bishop and Moderator's Commissary, Jaffna Diocese

The Moderator seated the newly elected Bishop on the Bishop's Chair and declared the Rt. Rev. Dr. S. Jebanesan to be a Bishop of the Church of God. The Consecration Service was followed by the celebration of the Holy Eucharist, where the Moderator was the chief celebrant. The litany was chanted by the Vicar of St. George's Cathedral, the Rev. D. Devairakkam and the offertory hymn was sung by the choir of the Cathedral. A large gathering of the worshippers at St George's Cathedral and well-wishers participated at the Holy Communion. Some of the important visitors present apart from those already mentioned are :

1. Mr. Michael Lockwood of UCBWM, presently at Madras Christian College He is also a son of late Mr E. C. Lockwood, Deputy President, Jaffna College and Mrs. Pat Lockwood.
2. Dr Mrs. C Ambalavanar, Medical Superintendent, Green Memorial Hospital, Manipay and wife of the retiring Bishop
3. Mrs. Vimala Jebanesan, wife of the newly consecrated Bishop
4. Misses Nirmaline and Geethanjali - the teenage daughters of the new Bishop
5. Mr. G. Rajanayam, Vice-Principal, Jaffna College and member of the Diocesan Council
6. Miss C. V. Selliah, Principal of Uduvil Girls' College and member of the Diocesan Council
7. Mr. C. B. Bavinck, Methodist Missionary in Colombo and formerly of Jaffna College
8. Prof. K. Balasubramaniam, Dean, Medical Faculty of the University of Jaffna
9. Mr. S. C. Chandrakasan, Treasurer, Pro TEG and a son of late Mr. S. J. V. Chelvanayagam, M. P. and Mrs. Chandrakasan
10. Mr. Shirley J. S. Pieris, General Secretary, N. C. C. Sri Lanka
11. Mr. Milroy Selvarajah, Colombo Church delegate to the Diocesan Council and former Diocesan representative to the C. S. I. Synod
12. Vasanthy Rajaratnam, Secretary, Colombo Church
13. Mrs. S. Selvarajah, Colombo Church
14. The Rev. Mrs. A. R. Tampiyappa - Deaconess, J D., C.S.I.
15. The Rev. S. Sugunananthan Australia - brother of the consecrated Bishop
16. The Rev. S. Manopavan, Australia - brother of the consecrated Bishop
17. Mr. S. Sugumar, Australia - brother of the consecrated Bishop

( Continued on Page 6 )

## Lunch by J. D., C. S. I. in Honour of The New Bishop

About three hundred guests and friends of the J. D., C. S. I assembled in the Synod Centre dining hall at lunch given in honour of the new Bishop the Rt Rev Dr. S. Jebanesan and his family on the consecration day.

The opening prayer was led by the Deputy Moderator the Rt. Rev. Jason Dharmarajah Prof. George Koshy the General Secretary of the C. S. I. Synod said it was an occasion to welcome the new Bishop and bid farewel to the retiring Bishop, the Rt. Rev. D. J. Ambalavanar. He also said all appreciate the good work done by the retiring Bishop. He affirmed that the Synod sympathises with the J. D.. C. S. I. the suffering Church in the midst of a suffering people and that he will give his fullest support to the new Bishop and all that his Church and he will do in future for the uplift of his people and the country.

The Moderator in his address welcomed the new Bishop. "The Rt. Rev. Dr. S Jebanesan is a well learned man and a man of prayer" he said. He also would pray for the continued down pouring of the Holy Spirit on the Bishop as he takes office at this crucial moment. He said, he hoped that the new Bishop will follow the footsteps of his predecessor the Rt. Rev. D. J. Ambalavanar. He was happy to hear that the former Bishop will continue to work for C. S. I. He also hoped that Bishop Ambalavanar would write a book on the History of C. S. I. in new Perspective.

Bishop Kenneth speaking next related his experience of his travel to Jaffna across Kilaly with the new Bishop. He said he would continue to work towards Church Union and reconciliation. He hoped that Church of Sri Lanka, where the J. D., C. S. I. would be a part would be a reality in his tenure of Bishoppric. In lighter vein he indicated that the singing of Hymn for Ceylon at the Madras. Cathedral at this consecration of the Bishop in Jaffna may also indicate an expansionist intention on the part of us. Sri Lankans.

The Rev. Paul Clayton of the UCBWM spoke next. "The Day of Pentecost is an important day in the history of the Church, People from far ends of the world gathered there. I am from the far ends and today people of different languages are gathered here. This s opposite of Babel' he said. People at the UCBWM are aware of the troubles in Sri Lanka and we would pray for you all and our solidarity is with the suffering people of Sri Lanka' he affirmed

The Rev. Dr. Kingsley Muttiah the President of Methodist Church in Sri Lanka speaking next said that he hoped that the new Bishop would also work towards ecumenism. The Rev. S Manopavan, a brother of the new Bishop speaking next said that God chose the correct person and made him the Bishop at the correct time. He traced the history of his brother's early life and said when the entire family migrated to Australia, Dr Jebanesan remained in Sri Lanka to be with his suffering masses. He said they could only thank God for all what He did to his family.

The new Bishop in his reply said that the agenda is set for him by the two former Bishops of the J. D. C. S. I. So it is easy for him to continue the good work done by them even though it is a critical moment. He made special reference to the American missionaries and promised the J. D., C. S. I would continue to follow the missionary traditions and maintain close relationship with them. He also said there are people from South Sri-Lanka and South India here today and we would continue to have fellowship with them.

Bishop Ambalavanar then got up to thank all those involved in the consecration. He said he would continue to give his support to the new Bishop. He reminded those present that at the first Synod Meet- of the C. S I a resolution was passed where the J. D.. C. S.I. was permitted to join the Church of Ceylon to form a United Church. The J. D. C. S. I Unanimously passed a resolution to join the Church of Lanka, but other factors prevented Church Union. He concluded that the Jaffna Diocese would be a link between Church in Lanka and the Church o South India if Church Union becomes a reality.

A prayer was then led by the new Bishop and lunch hosted by the J. D . S. C. I. followed.

## St. George's Cathedral Church felicitates OUR NEW BISHOP

The members of St. George's Cathedral, Madras felicitated our new Bishop Rt. Rev. Dr. S Jebanesan inside the Cathedral Church soon after the consecration service was over. The function was chaired by Mr. J. B. Jeyasingh one of the Trustees of St. George's Cathedral The function started with spiritual songs sung by clergy of Madras Diocese. The Bishop of Madras, the Rt. Rev. M Azariah speaking first welcomed the new Bishop. He said that Bishop Jebanesan is a great person like his two predecessors Bishop S Kulandran and Bishop D. J. Ambalavanar. He also welcomed the following visitors; 1. Bishop Kenneth Fernando, 2 Bishop Andrew Kumarage, 3. Rev. Dr Paul Clayton, 4 Rev Dr. Kingsley Mutiiah and 5 Mr. Shirley Pieris.

Mr. Victor David, former Treasurer of the Synod and present Treasurer of the Church spoke next. In his speech he firs welcomed the Moderator and all the Bishops who took part in the service. "Consecration of the Bishop in Jaffna at St George's Cathedral is a unique event" he said. Continuing his speech he said "The first Bishop in Jaffna was consecrated in this Church on 27th September 1947 today after 46 years the 3rd Bishop in Jaffna is also consecrated in the same Church We welcome him as one of our own Bishops. We in India are brothers of people of Jaffna and Bishop Jebanesan is our dear brother. Then turning to the two Anglican Bishops from Sri Lanka, he said in lighter Vein "This Cathedral was once an Anglican Cathedral some time back; we have joined a peoples' movement of God's people in our land and we invite you also to join us in this peoples' movement"

Mementos were presented by the members of the Pastorate Committee of the Cathedral Church to the consecrated Bishop, the Moderator, the Deputy Moderator, all the Bishops and all sepcial invitees, who will fondly remember the affection shown

The following presented the mementos:

Mr. Pandian, Mr. Ashok Koilpillai, Mr. M. A. S. Paul, Mr. Kumar Mangalam, Mr. John Panneerselvan, Mr Joseph Amirtharajah, Mr. John Manicasundram, Mr. Sareedar Joseph, Mrs. Pandian, Mrs. Punitha Koilpillai, Mrs. Thevamalar Paul, Mrs, Shanthi Panneerselvan.

Bishop Ambalavanar then spoke on behalf of the Jaffna Diocese. He thanked the authorities of St. George's Cathedral for the disposal of the beautiful Church for the the consecration service. He said. since it was difficult and hazardous to take all the Bishops to Jaffna. the consecration had to take place in Madras. It is a very sentimental occasion because the very same staff which was handed over to late Bishop Kulandran in this Church was handed down to the new Bishop in the very same Church today. He said he was especially thankfull to Bishop Azariah and all of the Madras Diocese for hosting all of them.

Bishop Azariah then proposed a vote of thanks. He thanked the trustees and the committee of St George's Cathedral for making this a historical event. He also said "The C S, I. is a united Church and it was made possible by God and the obedience of the servents of God. The people divided by language etc were united on Pentecost Day Similarly on Pentecost Day people of different states - Sri Lanka, Tamilnadu, Kerala, Karnataka and Andhra Pradesh worship in unison in the Church Therefore I request the whole Church to pray for all Bishops and their families." He also thanked Bishops Kenneth Fernando and Adrew Kumarage for coming all the way from Sri Lanka.

## A Tribute to the New Bishop by Professor Ranee Eliezer

**Bishop - Elect The Rev. Dr. S. Jebanesan of Jaffna**

The Consecration of Bishop elect Jebanesan on 30th May 1993 in the St George's Cathedral of Madras is of special joy, pride, and significance not only to his family and the war-torn people of Jaffna but for the many Tamils here in Melbourne, in Australia and in the Tamil diaspora that now spans some 40 countries or so.

Many of us remember Bishop Jebanesan as the quiet one in the very articulate family of Rev N Subramaniam and Chavkachcheri's Kanaga Acca a mother of great beauty, charm vivacity and hospitality. Most of us have happy memories of Jebanesan as a good friend, churchman, modern-day apostle, scholar, an administrator with consummate communication skills as a teacher and principal of Jaffna College, the Peninsula's oldest and finest educational institution. A truly courageous man. Jebanesan, among other brave professional men and women, elected to give up safety and security for himself, his wife, and children and stay behind to help teach and nurture the 800,000 refugees trapped in the Peninsula.

Even his docteral thesis is indicative of this remarkable man-not another thesis on "Science and Religion" or "God and the Universe" etc., but on "The Batticota Seminary", one of the corner-stones of Jaffna's intellect and civilisation. This Seminary at Batticotta (Tamil "Vaddukoddai" for round fort was founded in 1823 and is perhaps the oldest University College in the East and Far East. Its pioneering and far-sighted American Missionaries, Rev Dr. Daniel Poor and Rev. Dr. Richard Hoisington preached and published in classical Tamil. They taught and inspired the outstanding C. W. Thamotherampillai, Carol Viswanathan, J. R. Arnold Sathasivampillai, William Nevins Sithamparapillai, Wyman Kathiravellupillai and Evarts Kanagasabaipillai.

Together they began an intellectual ferment in Jaffna. They printed and produced an abundance of the 2500 year old Tamil grammar and literature; Christian literature, hymns and lyrics in Tamil; brought about the monumental English - Tamil dictionary by Winslow (Ameri-

( Continued on page [illegible] )

# உதயதாரகை

Estd 1841

மலர் 154 11 - 06 - 1993 இதழ் 07


## புதிய ஆயர் அதி. வண. கலாநிதி சுப்பிரமணியம் ஜெபநேசன்

தென்னிந்தியத் திருச்சபை யாழ்ப்பாண ஆதீனத்தின் புதிய ஆயராக பேருட்திரு. கலாநிதி சுப்பிரமணியம் ஜெபநேசன் அவர்கள் சென்னையிலுள்ள புனித ஜோர்ஜ் ஆசன ஆலயத்தில் கடந்த மே மாதம் முப்பதாம் திகதி அபிஷேகம் செய்யப்பட்டார். தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்ப்பாணம் பேராயத்தின் முதலாவது ஆயராக பேருட்திரு. கலாநிதி சபாபதி குலேந்திரன் மேற்படி அதே ஆசன ஆலயத்தில் 1947-ம் ஆண்டு அபிஷேகம் செய்யப்பட்டிருந்தார். இரண்டாவது பேராயராக 1971 ம் ஆண்டு பேருட்திரு. டேவிட் ஜெயரட்ணம் அம்பலவாணர் அபிஷேகம் செய்யப்பட்டார். மூன்றாவது பேராயராக 53 வயது நிரம்பிய புதிய ஆயர் பேரருட்திரு. கலாநிதி சுப்பிரமணியம் ஜெபநேசன் அவர்கள் திருநிலைப்படுத்தப்பட்டுள்ளார் புதிய ஆயரின் பதவி அமர்வு வழிபாடு வட்டுக்கோட்டை ஆசன ஆலயத்தில் ஜூன் 12-ம் திகதி நடைபெற்றது. இவ்வழிபாட்டைத் தொடர்ந்து புதிய ஆயருக்கான வரவேற்பு நிகழ்ச்சி யாழ்ப்பாணக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றுள்ளது.

ஆயர் வண கலாநிதி சுப்பிரமணியம் ஜெபநேசன் அவர்கள் 1940-ம் ஆண்டு மார்ச் மாதம் 28-ம் நாள் சாவகச்சேரியில் வண. சுப்பிரமணியம் தம்பதிகளுக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தார். ஆயர் தமது ஆரம்பக் கல்வியை சாவகச்சேரியிலுள்ள டிறிபேக் கல்லூரியில் பயின்றார். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் தனது உயர் கல்வியைக் கற்று, பேராதனை பல்கலைக்கழகத்தில் தமிழ், வரலாறு, பொருளியல் ஆகிய பாடங்களைப் பயின்று 1962 இல் கலைமாணியாக வெளியேறினார். கண்டியிலுள்ள கட்டுகஸ்தோட்டை புனித அந்தோனியார் கல்லூரியில் 1968 ஆம் ஆண்டுவரை பணியாற்றினார் அதே ஆண்டில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். புனித அந்தோனியார் கல்லூரியில ஆசிரியராகச் சேவையாற்றிய பின் 1969 ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியராகச் சேர்ந்துகொண்டார். 1986 இல் யாழ்ப்பாணக் கல்லூரி உப-அதிபர்களில் ஒருவராகவும் 1988 இல் யாழ்ப்பாணக் கல்லூரி முதல்வராகவும் நியமிக்கப்பட்டார்.

ஆயர் வண. கலாநிதி ஜெபநேசன் அவர்கள் தமிழ்நாடு இறையியல் கல்லூரியிலும், பெங்களூர் இறையியற் கல்லூரியிலும் தனது இறையியற் கல்வியைக் கற்று, செரம்பூர் பல்கலைக்கழகத்தில் இறையியல் பட்டத்தை B. D. (Bachelor of Divinity) பெற்றுக் கொண்டார். மதுரைப் பல்கலைக் கழகத்தில் முதுமாணிப் பட்டத்தையும், பேராதனைப் பல்கலைக் கழகத்தில் முதுகலைமாணிப் பட்டத்தையும் பெற்றார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ''அமெரிக்கன் மிஷனும் இலங்கையில் தமிழ் வளர்ச்சியும்,' என்ற பொருளில் ஆய்வுசெய்து 1985-ம் ஆண்டு கலாநிதி பட்டத்தையும் (P.hd) பெற்றுக் கொண்டார்

ஆயர் வண கலாநிதி ஜெபநேசன் அவர்கள் பல நூல்களையும், கட்டுரைகளையும், வாழ்க்கைக் குறிப்புக்களையும் தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் எழுதி வெளியிட்டுள்ளார். அவற்றில் அமெரிக்க மிஷனும் இலங்கையில் தமிழ் வளர்ச்சியும், வணக்கத்துக்குரிய டானியல் பூவர் கதை, கலாநிதி சபாபதி குலேந்திரன் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு என்பன குறிப்பிடத்தக்கவை.

ஆயரின் துணைவியார் திருமதி விமலா ஜெபநேசன் யாழ்ப்பாணக் கல்லூரியில் மேலைநாட்டு இசை ஆசிரியராக சேவையாறுகிறார்.

ஆயர் அவர்களின் புதல்விகள் செல்வி நிர்மலின், செல்வி கீதாஞ்சலி ஆகியோர் கோடைக்கனல் அமெரிக்க கல்லூரியில் கல்வி பயில்கின்றனர்.

ஆயர் அவர்களின் தகப்பனார் வண சுப்பிரமணியம் அவர்கள் அமெரிக்கன் மிஷன் பாடசாலைகள் பலவற்றில் தலைமை ஆசிரியராகவும் பின் யாழ் ஆதீனத்தின் ஊழியராகவும் இறைபணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது வண. சுகுணானந்தன், வண. மனோபவன், பொறியலாளர் சுகுமார் ஆகியோர் ஆயரின் சகோதரராவார்கள். திருமதி சாந்தா ஜெகநாதன் அவரின் சகோதரியாவார். இவர்கள் அனைவரும் அவுஸ்திரேலியாவில் பணிபுரிகின்றார்கள்.

புதிய ஆயர் பதவியேற்றதைத் தொடர்ந்து பல பெரியோர்கள் ஆயருக்கு வாழ்த்துச்செய்திகளைத் தெரிவித்துள்ளனர்.

யாழ். ஆயர் வண. தோமஸ் ஆண்டகை அவர்களின் வாழ்த்துச் செய்தியில், ''தென்னிந்தியத் திருச்சபையை வழி நடத்த புதிய ஆயராக வண. ஜெபநேசன் அவர்கள் தேர்ந்து கொள்ளப்பட்டதையிட்டு மன மகிழ்வடைகிறோம். குறுகிய காலங்களில் இவருக்குக் கிடைத்துள்ள உயரிய அழைப்புக்கள், இறைவன் இவரை உன்னத நிலைக்கு அழைத்துச் செல்லும் வெளிப்பாடாக அமைகின்றன. அவரது சாந்த குணமும், ஆடம்பரமில்லா அடக்கமான எளிமை வாழ்வும் இவரது அழைப்பின் அச்சாணியாகவும், எமது காலத்துக்குகந்த பணியாற்ற சாலச்சிறந்த குணங்களாகவும் அமைகின்றன. இவற்றுடன் இவரது மதிநுட்பமும் இறைவனின் ஞானமும் இணைந்து நற்பணி ஆற்ற இறையாசி வேண்டி நிற்கின்றோம்'' எனக் கூறியுள்ளார்.

ஓய்வுபெற்றுள்ள ஆயர் டி. ஜே. அம்பலவாணர் ஆண்டகை அவர்கள் தமது ஆசிச்செய்தியில், ''தென்னிந்தியத் திருச்சபை யாழ். ஆதீனத்தின் புதிய பேராயராக இறைவன் அருளால் அதி. வண. சுப்பிரமணிம் ஜெபநேசன் முறையான ஒழுங்குப்படி நியமிக்கப்பட்டதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். இறைவன் தனது தூய ஆவியின் நிறைவை அவருக்குத் தொடர்ந்து கட்டளையருளி ஆசீர்வதிக்க வேண்டுமென்று வேண்டி நிற்கிறோம். இறைவன் தனது நிறைவை ஆசிகளை அவர்கள் மேல் பொளிந்தருளுவாராக'' என வாழ்த்தியிருக்றார்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் அவர்கள் தமது ஆசிச்செய்தியில் ''ஆயர் ஆண்டகை அருட்திரு. ஜெபநேசன் அவர்களைத் திருநிலைப்படுத்தும் ஆராதனை விழா நிகழ்வதையறிந்து பெரிதும் மகிழ்வுறுகிறோம். உண்மையில் சமயப் பெரியார்களைப் போற்றுவதும் பாராட்டுவதும் ஆண்டவனின் வழிபாட்டுக்கொப்பாகும் ஆயர் அவர்களின் அன்புததும்பும் உபசரிப்பும் பேச்சும் யாவரையும் கவர்ந்து ஈர்ப்பன. ஆண்டவன் திருவருள் வேண்டி எல்லோருக்கும் எமது நல்லாசிகளை வழங்குகின்றோம். என்றும் வேண்டும் இன்ப அன்பு'' என வாழ்த்தியிருக்கிறார்.

## சென்னையில் வண. டாக்டர் ஜெபநேசன் அருட்பொழிவு வைபவம்

தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்ப்பாணம் இறை வட்டத்தின் புதிய ஆயராக வண. டாக்டர் சுப்பிரமணியம் ஜெபநேசனுக்கு மே மாதம் 30ம் திகதி அருட்பொழிவு பெறும் வைபவ ஆராதனை சென்னை புனித ஜோர்ஜ் பேராலயத்தில் நடைபெற்றது. இவ் அருட்பொழிவு ஆராதனையில் பின்வரும் ஆயர்கள் கலந்து கொண்டனர்.

அதி மிகு வண வசந்தி டான் டி.. - பிரதம பேராயர் - தென்னிந்திய திருச்சபை

அதி வண டி. பி. டி பிரகாசராா - ஆயர் கிருஸ்ணா - கோடாவரி பேராயம்

அதி வண.கலாநிதி பி.ஜி. குருவியா - ஆயர் வட கேரளா பேராயம்

அதி வண எம்: அசரையா - ஆயர் சென்னை பேராயம்

அதி. வண வில்லியம் மோசஸ் ஆயர் கோயபுத்தூர் பேராயம்

அதி. வண. கலாநிதி சாமுவேல் அமிர்தம் ஆயர் தென் கேரளா பேராயம்

அதி வண. கெனத் எம். ஜே பெர்ணாண்டோ ஆயர் கொழும்பு இலங்கைத் திருச்சபை

அதி வண. அன்ரு குமரகே ஆயர் குருநாகல் இலங்கைத் திருச்சபை

அதி. வண டி. ஜே. அம்பலவாணர் முன்னாள் ஆயர் தென்னிந்தியத் திருச்சபை யாழ்பபாண பேராயம்

அதி வண. ஜேசன் எஸ். தர்மராஜ் உதவி பிரதம பேராயர்

அதி. வண எஸ். ஜே. தியோடோர் கரிநகர் பேராயம்

பிரதம ஆயருக்கு புதிய ஆயரை அறிமுகம் செய்தோர் பின்வருமாறு

அருட்திரு. அன்டனி எ போல் செயலர் யாழ் பேராயம் குரு, வட்டுக்கோட்டை பேராலயம்

அருட்திரு எஸ் ஜெயநேசன் கொழும்பு தெ இ. தி. தேவாலயம்

அருட்திரு டி. எஸ். தியாகராஜா முதல்வர் கிறிஸ்தவ இறையியல் கழகம் சுன்னாகம்

இதன் பின்னர் தென்னிந்தியத் திருச்சபையின் செனட் மகாசபையின் பொதுச் செயலர் பேராசிரியர் ஜோர்ஜ் கோசி அவர்கள் நியமன அதிகாரப்பத்திரத்தை வாசித்தார்.

இவ்வாராதனை ஆரம்பத்தில் தமிழ்நாடு காவல்துறை வாத்தியத்துடனும், கிறிஸ்தவ பாடல்களை இசைத்தவாறு நாதஸ்வர மேளத்துடன் பேராயர்களும், குருமார்களும், பாடகர் குழுவும் பவணியாக வந்தனர்.

அதன் பின்னர் ஆயர் அதி. வண. அன்ரு குமரகே, அருட்திரு போல் கிளைட்டன் (UCBWM) பேராயர் அருட்திரு டி. ஜே. அம்பலவாணர் ஆகியோரால் வேதம் வாசிக்கப்பட்டது.

முன்னாள் தமிழ்நாடு இறையியற் கழகத்தின் முதல்வர் அதி. வண. கலாநிதி சாமுவேல் அமிர்தம் அருளுரையாற்றினார் ஆயர் அதி. வண. எஸ். ஜெபநேசன் மாணவராக இருந்த வேளை இவர் கற்பித்தவர் என்பதும் நினைவு கூறத்தக்கது

இலங்கையிலிருந்து இந்த அருட்பொழிவு வைபவத்தில் பல பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

திருமதி வைத்திய கலாநிதி சந்திரா அம்பலவாணர் கிறீன்மெமோறியல் வைத்தியசாலை மானிப்பாய் திருமதி விமலா ஜெபநேசன் புதிய ஆயரின பாரியார் செல்விகள் நிர்மலின், கீதாஞ்சலி புதிய ஆயரின் புதல்விகள் திரு. ஜி இராஜநாயகம் உப அதிபர் யாழ்ப்பாணக்கல்லூரி செல்வி சி வி செல்லையா அதிபர் உடுவில் மகளிர் கல்லூரி திருமதி வசந்தி இராஜரட்ணம் செயலர் கொழும்பு தெ. இ தி. திரு. மில்ரோய் செல்வராஜா கொழும்பு ஆலய ஆதீன பிரதிநிதி அருட்திரு திருமதி எ. ஆர். தம்பியப்பா உதவி குரு பண்டத்தரிப்பு திரு. சி. பி. பெவிங் மிஷனரி முன்னாஸ் யாழ்ப்பாணக்கல்லூரி மேற்பார்வையாளர் அருட் கலாநிதி கிங்கிலி முத்தையா தலைவர் மெதடிஸ் திருச்சபை திருமதி எஸ். ஜெபநேசன், திருமதி எஸ் செல்வராஜா கொழும்புத் திருச்சபை திரு. சேலி, பீரிஸ் பொது செயலர் இலங்கை தேசிய கிறிஸ்தவ சபை திரு. எஸ். சி, சந்திரகாசன் இந்தியாவிலுள்ள புரோடெக்கின் பொருளாளரும் காலஞ்சென்ற எஸ். ஜெ, வி.செல்வநாயத்தின் மருமாவார் பேராசிரியர் கே. பாலசுப்பிரமணியம் பீடாதிபதி யாழ் பல்கலைக் கழக மருத்துவபீடம்

புதிய ஆயரின் சகோதரர்கள் அருட்திரு எஸ். சுகுணானந்தன் அருட்திரு எஸ். மனோபவன் திரு. எஸ். சுகுமார் அவுஸ்திரேலியாவிலிருந்து வந்து கலந்து கொண்டனர்.

இவ் அருட்பொழிவு வைபவத்தின் இறுதியில் புனித ஜோர்ஜ் பேராய நிர்வாகக் குழுவினர் புதிய பேராயரைக் கௌரவித்து ஞாபக சின்னத்தை வழங்கினர். மேலும் பேராயர்களுக்கும் மேற் கூறிய அனைத்து அதிதிகளுக்கும் ஞாபகச் சின்னம் வழங்கப்பட்டது

இவ் அருட்பொழிவு வைபவத்தின் பின்னர், கலந்து கொண்ட விசேட அதிதிகளுக்கு புதிய அத்தியட்சகர் சார்பாக மதிய உணவு வழங்கப்பட்டது. இவ் மதிய உணவில் ஏறக்குறைய 300 பேர் கலந்து

(மிகுதி 4ம் பக்கத்தில்)

## தாரகை ஒளி

'' நல்ல மனிதனுடைய நடைகள் ஆண்டவரால் உறுதிப்படும், அவனுடைய வழியின் மேல் அவர் பிரியமாயிருக்கிறார் ''

— சங்கீதம் 37 : 23

## எங்கள் கருத்து

### நமது புதிய பேராயர்

அமிழ்தினுமினிய தமிழ்மொழி வழங்கும் தென்னிந்திய திருச்சபை ஆதீனங்களுள் யாழ். ஆதீனம் அளவிற் சிறிதாயிருந்த போதிலும், பல துறைகளில் சிறந்து விளங்குகிற தென்பது மிகையாகாது. இனக்கலவரங்களினால, பற்பல இடையூறுகள் ஏற்பட்ட போதிலும் சமூக அபிவிருத்திப் பணிகளில் கடந்த பல ஆண்டுகளாக ஈடுபட்டு, குறிப்பிடத்தக்க முன்னேற்றமடைந்துளது நெடுந்தீவு தொடக்கம் கிளிநொச்சி, வவுனியா, கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் யாழ். ஆதீன சபைகள் நற்பணியாற்றுஞ் சபைகளாக திகழ்ந்து வருவது கண்கூடு.

இவ்வாதீனத்தில் 1947 ஆம் ஆண்டு தொடங்கி விரிந்த அறிவும் பரந்த நோக்கமும் உடைய இரு பேராயர்கள் பணியாற்றினர் ஆதீனத்தின் இரண்டாவது பேராயர் இளைப்பாறிய பின் மூன்றாவது பேராயராக அருள்மிகு அறிவர் எஸ் ஜெபநேசன் அவர்கள் திருநிலைப்படுத்தப்பட்டார். இவரையும் இவரது பாரியாரையும் நமது ஆதீனமும், ஆதீனசபைகளும் மகிழ்வுடன் வரவேற்று வாழ்த்தின.

இறைவன் தம் திருப்பணியாளர்களுக்கு அளிக்கும் பதவியுயர்ச்சி பொறுப்புகள் அடங்கிய உயர்ச்சியே இப்பொறுப்புக்களை நிறைவேற்ற தமது பிரசன்னத்தின நிச்சயத்தையும் இறைவன் அளிக்கிறார் அன்று, மோசேக்குப் பின், இஸ்ரவேல் மக்களை வழிநடத்தும்படி யோசுவாவை அழைத்த கடவுள் ''நான் மோசேயோடிருந்ததுபோல், உன்னோடும் இருப்போன். நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை'' என்று வாக்களித்தார். இவ்வாக்குறுதியை நமது புதிய பேராயரும் பெற்றுள்ளனர்.

புதிய பேராயருக்கு இருக்கும் பொறுப்புக்கள் பல நமது இளைப்பாறிய பேராயர், கடந்த 22 ஆண்டுகளாக நமது ஆதீனத்தில் பல முன்னேற்றப் பணிகளை நிறைவேற்றினார் இப்பணிகள் தளர்ந்து போகாமல் உறுதிபெறவேண்டும் இன்றைய சூழலில் இப்பணிகளின் நற்பலன்களை, அடக்கி ஒடுக்கப்பட்டு வறிய நிலையில் வேதனையுறும் தமிழ் மக்கள் பெற்று வளமான வாழ்வு வாழ வழிவகுத்தல் வேண்டும்.

அடுத்து, நற்செய்திப்பணி, இன்றைய முறைப்படி, சமைய உரையாடலுடன் இணைந்து செயற்படவேண்டும். இது நமது தலையாய கடமை. நற்செய்திப் பணியில் ஈடுபடாத சபை, உயிர்ப்பற்றற்ற சபையெனவே கருதப்படும். சமுதாயப் பணியும் நற்செய்தி அறிவிப்புப்பணியும், ஒரு காசின் இரு பக்கம் போன்றவை எனவே, ஒன்றைவிட்டு மற்றதைப் பிரிக்கப்படாது நற்செய்தி அறிவிப்புப் பணியைத் தவிர்த்து, சமுதாய அபிவிருத்திப் பணியை மட்டும் கவனிப்பது சரியன்று. இது அருட்பணியின் முறைமைக்கு முரணானது.

